சுருக்கம்

பள்ளிக் கல்வி – கருணை அடிப்படையில் பணி நியமனம்- திரு.மூ.சுகுமார், த/பெ (மறைந்த) கு.மூக்கன், இளநிலை உதவியாளர்- பணிவரன்முறை- ஆணை வெளியிடப்படுகிறது.

---

பள்ளிக்கல்வி(ப.க.4(1)த் துறை

அரசாணை (1டி) எண். 208

நாள். 26.07.2022
திருவள்ளுவர் ஆண்டு 2053
சுபகிருது ஆடி 10

படிக்கப்பட்டவை :-

1. அரசாணை (2ப) எண் 05, ப.க (நீ.வ3(2))த்துறை, நாள் 06.01.2017.
2. பள்ளிக் கல்வி இயக்குநரின் கடித ந.க.எண் 53882/ஜே1/2020, நாள் 18.12.2020.
3. பள்ளிக் கல்வி ஆணையரின் கடித ந.க.எண் 53882/ஜே1/இ1/2022, நாள் 01.04.2022.

---------------

ஆணை:-

நாமக்கல் மாவட்டம், செ.புதுப்பாளையம், அரசு உயர்நிலைப் பள்ளியில் பதிவுரு எழுத்தராகப் பணிபுரிந்து பணிக்காலத்தில் 17.02.2009-ம் நாளன்று காலமான திரு.மூக்கன் என்பவரின் மகன் திரு.எம்.சுகுமார் என்பவர் பொருட்டு அரசாணை (நிலை) எண் 9, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 19.01.1998-ல் வெளியிடப்பட்ட ஆணைக்கு விலக்களித்து கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கி மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணை வெளியிடப்பட்டது.

2. மேலே இரண்டாவதாக மற்றும் மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதங்களில், மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி திரு.மூ.சுகுமார் என்பவர் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக 14.09.2018 முற்பகல் முதல் பணிபுரிந்து வருவதாகவும், அன்னாரது பணியினை 14.09.2018 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணை வழங்குமாறு பள்ளிக் கல்வி ஆணையர் கோரியுள்ளார்.

3. பள்ளிக் கல்வி ஆணையரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து, அதனை ஏற்று, திரு.மூ.சுகுமார், இளநிலை உதவியாளர் பொருட்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் பணி நிபந்தனைகள் சட்டம் பிரிவு 15 மற்றும் பிரிவு 28(2) ஆகியவற்றிற்கு விலக்களித்து தனியரின் பணியினை அவர் இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்த நாளான 14.9.2018 முற்பகல் முதல் வரன்முறை செய்து, அந்நாள் முதல் பணப்பலன்கள் வழங்கலாம் என அரசு முடிவு செய்துள்ளது.

4. அதன்படி, தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் பிரிவு 58-ல் மாண்புமிகு ஆளுநர் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி, கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணி நியமனம் செய்யப்பட்ட திரு.மூ.சுகுமார் என்பவரது பணியினை 14.09.2018 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து, அந்நாள் முதல் பணப்பலன்கள் வழங்க ஏதுவாக, தனியர் பொருட்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் பணி நிபந்தனைகள் சட்டம் பிரிவு 15 மற்றும் பிரிவு 28(2) ஆகியவற்றிற்கு விலக்களித்து தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் ஆணையிடுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

காகர்கலா உஷா
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
பள்ளிக் கல்வி ஆணையர், சென்னை-6
தனியர்,
(பள்ளிக்கல்வி ஆணையர் அலுவலகம் வழியாக)

நகல்
மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களின்
நேர்முக உதவியாளர், சென்னை-9.
மனித வள மேலாண்மைத் துறை, சென்னை-9
நிதித்துறை, சென்னை-9
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை,
சென்னை-9.
பள்ளிக் கல்வித் துறை முதன்மைச் செயலரின்
முதுநிலை தனிச் செயலர், சென்னை-9.
இருப்பு கோப்பு/உதிரி நகல்

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்